# இலக்கணத்தில் தோழிஓர் அறிமுகம்

**ம. ஜெயலெட்சுமி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தாமரைப்பாடி

**மலர்:** 3
**சிறப்பிதழ்:** 4
**மாதம்:** மார்ச்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடையாளர் தொடர்பு"**

என்னும் குறளுக்கேற்ப ஒரு நல்ல நண்பனின் நட்புபுத்தகம் போன்றது சங்க இலக்கியம் முதல் இன்று வரை நட்பு போற்றபட்டுவருகிறது. இலக்கியங்களில் தலைவியின் காதல் வாழ்விலும் கற்புவாழ்விலும் அவளுககு உயிர்த்துணையாய் விளங்குபவள் தோழி இவள் தனக்கென வாழாமல் தலைவிக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவள். இத்தன்மை பெற்றவளே தலைவியின் உயிர்த்தோழி எனச் சிறப்பிக்கப்படுபவள் ஆவாள்.

## தோழி

**"தோழி தானே செவிலிமகளே"**

தோழி செவிலித்தாயின் மகள். தலைவியுடன் வளர்பவள் என்பதை தொல்காப்பியம் சுட்டுகிறது.

**"தோழி செவிலிமகளாய்ச் சூழ்தலோடு**
**உசாத்துணை ஆகி அசாத்தினிவித்தற்கு**
**உரியகாதல் மருவியதுணையே"**

என்ற நூற்பாதோழி செவிலிமகளாய் தலைவியுடன் இருந்து அவளது நன்மை, தீமைகளில் பங்கு கொள்பவளாகவும், அவளது வருத்தத்தைத் தீர்ப்பவளாகவும் உற்றதுணையாய் விளங்குவதையும் சுட்டுகிறது.

## மதியுடம்படுதல்

**"குறையுறஉ ணர்தல் முன்னுறஉ ணர்தல்**
**இருவரும் உள்வழிஅவன் வரவுணர்தல் என**
**மதியுடம்படுதல் ஒரு மூவகைத்தே"**

களவொழுக்கம் தோழிக்கும் தெரியாமல் தான் தொடங்கும். ஆனால் துணை தேவைப்படும் போதுதலைவன் தோழியின் உதவி வேண்டிவருவான். மேலும் தலைவியின் உள்ளக் குறிப்பினை தோழி அறிதல், தலைவியும் தோழியும் ஒன்றாக இருக்கும் போது தலைவன் வர உணர்தல் என்ற மூன்று நிலைகளிலும் தோழி தலைவியின் காதலை அறிந்துகொள்ளும் மதிநுட்பம் உடையவளாக திகழ்கிறாள். இதனை பாங்கிமதி உடன்பாடு எனலாம். தலைவியின் வாழ்க்கையில் அக்கறை செலுத்தும் பெண்ணாகவும், தாய் காக்கும் சேயைப் போல் தலைவியின் வாழ்க்கையை வழி நடத்திச் செல்லும் ஆசானாகவும் தோழி விளங்குகிறாள்.

## தோழி-பொருள்

'தோழி' என்ற சொல் மிகவும் பழமை வாய்ந்த சொல்லாகும். தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களிலும், இலக்கியத்திலும் 'தோழி' என்ற சொல்லே காணப்படுகின்றது.

**"தோளுக்கு உயர்ந்தவன் தோழன்"**

என்ற பழமொழி வழக்கில் உள்ளது. அதனைப் போல் தோளுக்கு உயர்ந்த பெண்மகளைத் தோழி என்று அழைக்கவும் வாய்ப்பு இருக்கிறது. தமிழில் 'ழ' சில நேரங்களில் 'ள' கரமாக மாறுபடுகிறது.

**சான்று**

பவளம் - பவழம்

துளவம் - துழவம்

உளுந்து - உழுந்து

இவற்றைப் போல தோளி-தோழி என்று மாறும் வாய்ப்புள்ளது. தமிழ்மொழியில் தோழ் என்பதற்கு ஒத்த நிலையில் உடையவள் என பொருளுண்டு. அறிவு நிலையில் ஆற்றல் நிலையில் தலைவியோடு ஒத்த நிலையில் உள்ளவள் தோழி என்று பொருள் கொள்ளலாம்.

**அறத்தோடு நிற்றல்**

தலைவி வழி அறிந்த காதலைப் பாங்கி செவிலித்தாய்க்கு உரைப்பது பாங்கி அறத்தோடு நிற்றலாகும். இதனை,

> **"எறிவளை வேற்றுமைக்கு ஏதுவினாவினும்**
> **வெறிவிலக்கிய வழி வினாவினும் பாங்கி**
> **பூவே புனலேகளிறே என்று இவை**
> **ஏதுவாகத் தலைப்பாடு இயம்பும்"**

சேவிலி தலைமகளின் வேற்றுமைக்கு உரிய காரணத்தை தோழியிடம் வினவுவதால் தோழி பூத்தருபுணர்ச்சி, புனல் தருபுணர்ச்சி, களிறு தருபுணர்ச்சி ஆகியவற்றைக் கூறி அறத்தோடு நிற்றலை தொல்காப்பியம் சுட்டுகிறது.

**தோழி அறத்தோடு நிற்கும் வழிவகைகள்**

தோழி ஏழுவகையாக செவிலிக்குத் தலைவியின் களவு ஒழுக்கத்தை வெளிப்படுத்துகிறாா். முக உயர்ந்தானாயினும் தலைவன் எளிமையாய் நடப்பவன் என்பாள். அவனைப் புகழ்வாள். அவன் தலைவி மீது கொண்ட வேட்கையைச் சொல்வாள் தன் தாயாரிடம் அவர்களே முடிவு கூறுமாறு வினவுவது போல் பேசுவாள். ஒரு காரணத்தால் இது நிகழ்ந்ததெனக் கூறுவாள். இருவரும் எதிர்பாராது எதர்ப்பட்டனர் என்பாள். முன்பு கூறியவற்றில் பொய்யாகப் புனைந்தும் பேசுவாள் எனினும் இறுதியில் நடந்த உண்மையை அப்படியே சொல்லுவாள் என்பதை தொல்காப்பியர் குறிக்கிறார்

**தோழிக்கு உரிய செயல்கள்**

> **"பிரிவுழிவிலக்கலும் பிரிவுஉடன் படுத்தலும்**
> **பிரிவுவழித் தேற்றலும் பிரிவுழிஅழுங்கலும்**
> **பிறவும் உரிய இறைவளைப் பாங்கிக்கு"**

பிரியக் கருதிய தலைவனின் செயலைத் தடுத்தலும், பிரிவுக்கு உடன்படுதலும் தலைவனின் பிரிவால் துன்புறும் தலைவியைத் தேற்றலும், பிரிவை நீக்குதலுமாகிய செயல்கள் தோழிக்கு உரியன என்பதை அகப்பொருள் இலக்கணம் எடுத்துக் கூறுகிறது.

**தோழியர் பலர்**

நம்பியகப் பொருள் தவிரஏனைய அகப்பொருள் இலக்கண நூல்களில் தோழியர் எனப் பன்மையில் சுட்டும் வழக்கு இல்லை. செல்வச் சிறப்புடன் விளங்கும் குடியிலே பிறந்த தலைவிக்குத் தோழியர் பலர் இருந்தனர் எனினும் உயிர்த்தோழியாக கருதப்படுபவர் ஒருவளே. இதனை,

**"பயில்வாரெல்லாருந் தோழியராகார். அருமறை கிளக்கப்படுதலான் உடன் முலையுண்டு வளர்ந்த செவிலிமகளே தோழி எனப்படுவாள்"**

என்பார் இளம்பூரணர்.

**தோழியின் வேறு பெயர்கள்**

**"சிலதியே சகியே பாங்கி சேடியே இகுளை தோழி**
**நலமுறு முன்னிலைப்போர் நாடின் மற்று ஏடிஎல்லா"**

என்று சூடாமணிநிகண்டு குறிப்பிடுகிறது. இதன்வழி, சிலதி, சகி, பாங்கி, சேடி, இகுளை, தோழி என்றும், முன்னிலைப் பெயரான ஏடி, எல்லா என்ற பெயர்களும் தோழியின் வேறுபெயர்கள் என அறிய முடிகின்றது.

**அன்புநிலை**

**"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதேதுணை"**

என்ற குறளில் வள்ளுவரும் வீரத்திற்கும் அன்பே துணை என்பர். இத்தகைய அன்பினைத் தன்னுயிராகக் கொண்டவள் தோழி. அன்புடன் கூடிய வாழ்வே அவளின் வாழ்வு. அன்பிலே தோன்றி அன்பிலே வளர்ந்து, அன்பிற்காக வாழ்ந்தவளே தோழி. சுருங்கக்கூறின் அன்பிற்காக தன்னை அடிமைப்படுத்திக் கொண்டவள் தோழி.

**நிறைவுரை**

கண்ணகிக்கு தேவந்தியும், மணிமேகலைக்கு சுதமதியும், மாதவிக்கு வயந்த மாலையும் காலம் காலமாக நட்பு போற்றப்பட்டு வருகிறது என்பதற்கு சான்றாவர். நட்பு என்பது ஒருவரையொருவர் புரிந்து கொண்டு தனக்காக வாழாமல் தன் தோழிக்காக வாழும் நிலையாகவே இலக்கணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது.